உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ



திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்

# தலைவனுக்கொரு மலர்

25.09.2021

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# சமர்ப்பணம்

**எங்கள் இதயத் தெய்வம் !**

வண்ணார்பண்ணை காரைக்காட்டு லேன்
விஸ்வ குலத்தில் உதித்த

**திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்** அவர்கள்
*(சின்னமணி பத்தர்)*

**தம் தூய நல் ஆத்மா !**
**இறையடியில் சாந்தி பெற !**

# "தலைவனுக்கொரு மலர்"

**எனும் இந் நினைவமுதம் !**
**அவர்தம் பாதங்களுக்குச் சமர்ப்பணம் !**
**எனச் சமர்ப்பிக்கின்றோம் !**

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!**

*- இங்ஙனம் -*
**மனைவி, மக்கள்**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ



மண்ணுலகில்
**06-10-1958**

விண்ணுலகில்
**26-08-2021**

# அமரர் திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்

ஆண்டு பிலவ வருடம் ஆவணி வியாழன் பூண்ட மறை
சதுர்த்தி தினம் பத்தில் - மாண்புமிகு **சந்திரசேகரம்** விண்ணோர்
சிவன் பாதம் சேர்ந்த நாளாமிது.

# அமரர் திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்
அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கைத் திருநாட்டின் வடபுலமான யாழ் குடாநாட்டின் எழில்மிகு கிராமங்களில் ஒன்றான வண்ணார்பண்ணை காரைக்காட்டு லேனில் சீரும் சிறப்போடும் வாழ்ந்த விஸ்வ குலத்தைச் சேர்ந்த அமரர்களான சபாரத்தினம் மகேஸ்வரி தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வனாக சந்திரசேகரம் எனும் திருநாமத்துடன் இத்தரணியில் 06-10-1958 இல் அவதரித்தார். அமரர் சந்தனராசா இவரின் மூத்த சகோதரனாகவும் திருமதி. சந்திரவதனி, திருமதி. வசந்தி ஆகியோர் இவரின் இளைய சகோதரிகளாகவும் உதித்தனர்.

அன்னார் குழந்தைப் பருவத்திலிருந்தே நற்குணங்களை தன்னகத்தே கொண்டவராக வளர்ந்தார். இவர் தனது கல்வியை யாழ்ப்பாணம் பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் கற்றார். தன் தந்தை இறந்த பின் குடும்ப சூழ்நிலை காரணமான தனது கல்வியை இடைநிறுத்தி தன் விஸ்வகுலத் தொழிலான நகைத் தொழிலை குரு ஒருவரிடம் முறையாக பயின்று வந்தார். அத்தொழிலில் பாண்டித்துவம் பெற்ற பின்னர் தனியாக தொழில் செய்ய ஆரம்பித்தார். நகைத்தொழிலில் ஒமிச வேலைகளில் தனக்கே உரிய பாணி ஒன்றை உருவாக்கி தொழில்த்திறமையை சிறப்பாக வெளிப்படுத்தியதால் பலரது பாராட்டையும் இளம்வயதிலேயே பெற்றார். சந்திரசேகரம் என்ற பெயரை இவரது பெற்றோர்கள் சூட்டி இருந்தாலும் சின்னமணி என்ற பெயராலேயே எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

அன்னார் தனது திருமண வயதை அடைந்ததும் வாழ்வின் அதி உன்னத பாகத்தினுள் நுழையும் முகமாக அவர் தனது இருபத்திமூன்றாவது அகவையில் தனது விஸ்வகுலத்திலேயே அச்சுவேலியைச் சேர்ந்த அமரர்களான திரு. துரைசிங்கம் இராஜலட்சுமி தம்பதிகளின் ஆறாவது புதல்வியான துதிகாம்பியை (கிளி) 1980 ஆம் ஆண்டு திருமணம் புரிந்தார். இதில் சிறப்பு என்னவெனில் தான் விரும்பிய பெண்ணை அவர் தம் வீட்டில் முறைப்படி பெண் கேட்டு சீதனம் ஒரு துளியும் வாங்காது தான் செய்த நகைகளாலேயே தன் காதல் மனைவியை அலங்கரித்து கரம் பிடித்த கௌரவமான ஆண்மகனாகவும் விளங்குகின்றார்.

திருமண வாழ்வைத் தொடர்ந்து அவரது தொழில் வாழ்விலும் வளர்ச்சியடையத் தொடங்கிய இவர் தங்க நகைகளில் under ground மோதிரம் செய்வதில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். பின்னர் தான் கற்ற கலையை இன்னொருவரின் வாழ்க்கைக்கு வழிகாட்டிவிட்டு under ground மோதிரம் செய்வதிலிருந்து தாலிக் கொடி செய்வதில் அதீத ஈடுபாட்டைக் காட்டினார். அதில் சிறந்து மிளிர்ந்த அவர் யாழ்பாணத்தில் சின்னமணி பத்தரின் கையால் செய்யாத தாலிக் கொடி அணிந்த பெண்களை விரல்விட்டு எண்ணலாம் என்று நண்பர்கள் மெச்சும் அளவிற்கு தாலிக் கொடி செய்வதில் புகழ்பெற்றும் விளங்கினார்.

இவ்வாறு இனிமையாக சென்றுகொண்டிருந்த அன்னாரின் வாழ்வு குழந்தைச் செல்வங்களால் பூரணமடைந்தது. அன்னாரும் அவரது பாரியாரும் கமலன், கஸ்தூரி, பிரியங்கா ஆகியோரை புதல்வர்களாக பெற்றெடுத்தனர். அன்னார் தம்பிள்ளைகளுக்கு சீரான கல்வி, நல்லறிவு, நற்பழக்கம் என்பவற்றை கொடுத்ததோடு மட்டுமல்லாது அவர்களுடைய வாழ்வியல் நிகழ்வுகளையும் குறிப்பாக பிள்ளைகளுடைய பிறந்தநாட் கொண்டாட்டங்கள், பெண்பிள்ளைகளது பூப்புனித நீராட்டுவிழா மற்றும் முதல் இரு பிள்ளைகளது திருமண வைபவங்களையும் மிக விமர்சையாக நடாத்தி

சிறந்த தந்தைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறார். இன்று அவருடைய மூன்று பிள்ளைகளும் தம் சொந்தக் கால்களில் நின்று வாழ்வை கொண்டு செல்லும் அளவிற்கு அவர்களை ஒழுங்காக வழிநடத்தியுள்ளார். அன்னாரது மூத்த மகன் சொந்த வியாபாரம் (கொழும்பு) செய்பவராகவும், இரண்டாவது மகள் தாதியாகவும் (சுவீடன்), மூன்றாவது மகள் ஆசிரியையாகவும் (கொழும்பு) திகழ்கின்றனர்.

அன்னார் தனது இரண்டாவது புதல்வி கஸ்தூரிக்கு சுவீடனில் வசித்த சுதர்சன் என்பவருக்கு மணம்முடித்து வைத்தார். இவர்களுடைய திருமணம் இந்தியாவில் எல்லோரது ஆசீர்வாதத்துடனும் சிறப்பாக நடந்தேறியது. இவர்களுக்கு அன்றினா, றியானா என்ற இரு பெண் குழந்தைகளும் பிறந்தனர். இதனைத் தொடர்ந்து அன்னார் தன் ஏக புதல்வனான கமலனுக்கும் அவர் மனம் விரும்பிய பெண்ணான லோகமதியை எல்லோர் ஆசீர்வாதத்துடனும் கொழும்பில் திருமணம் செய்து வைத்தார். இவர்கள் ஹாசினி என்ற பெண் குழந்தையை பெற்றெடுத்தனர். அன்னார் தன் வாழ்நாள் முழுதும் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்தார். அவர்களது விருப்பத்திற்கே முன்னுரிமை கொடுப்பவராகவும் அவர்கள் விருப்பமே தன் விருப்பம் என்று அவர்கள் சந்தோஷத்தைப் பார்த்து அகம் மகிழ்ந்தார். தனக்காக எதையும் செய்யாதவராகவும் தாம் பெற்ற பிள்ளைகளுக்கு சகல வசதி வாய்ப்புக்களையும் செய்து கொடுத்தார்.

சொந்த வீடு வாசல்கள் என சிறப்பான வாழ்வை வாழ்ந்த அன்னார் மூன்று வீடுகளுக்கு சொந்தக்காரராகவும் திகழ்ந்தார். அவருடைய கனவு இல்லமாக இவர் கட்டிய மூன்றாவது இல்லம் விளங்கியது. நாட்டில் அசாதாரண சூழல் நிலவிய காலப்பகுதியில் ஒரு சீமெந்து பைக்கற்றின் விலை பத்தாயிரம் விற்கப்பட்ட நேரத்திலும் கூட 1995, 1996 காலப்பகுதியில் இடப்பெயர்வை சந்தித்தாலும் தன்னுடைய வீட்டை தான் ஆசைப்பட்டது போல் சிறப்பாக கட்டி முடிக்க வேண்டும் என்று மும்முரமாக செயற்பட்டு அவ்வீட்டிற்கான புதுமனை புகுவிழாவையும் சிறப்பாக செய்து அவ் இல்லத்திற்கு ‘பிரியங்கா இல்லம்’ என்றும் பெயர் சூட்டினார்.

வாகனங்கள் மீதும் பிரியம் கொண்ட அன்னார் சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் என எல்லாவற்றிலும் வலம் வந்தார். அதில் இவருக்கே தனித்துவமானது 10ஸ்ரீCD185. அன்னார் அதில் வரும் கம்பீரம் சொல்லமீளாதது. "செய் தொழிலே தெய்வம்" என்று விஸ்வகுலம் போற்ற அவதரித்த அன்னார் நகைத் தொழிலில் நேர்மையுடன் செயற்பட்டு தனக்கென்றோர் இடம்பிடித்து கஸ்தூரியார் வீதியில் கொடிகட்டிப்பறந்தார். திருமணத்தின் போதான பொன் உருக்கு நிகழ்விற்கு அன்னார் அதிகம் விரும்பி அழைக்கப்பட்டார். காரணம் அன்னார் கைராசியான பத்தர் என்ற பெயரை பெற்றிருந்தமையினாலாகும்.

வாழ்வு என்பது இன்பம், துன்பம் என்ற இரண்டும் கலந்தது. அதே போல அன்னாரது வாழ்வும் இரண்டும் கலந்ததாக காணப்பட்டது. வாழ்வில் பல மறக்க முடியாத சம்பவங்கள், ஏற்ற இறக்கங்கள், கஷ்டங்கள் என்பவற்று-க்கும் அவர் முகம் கொடுத்தார். ஆனாலும் அன்னார் சிறிதும் துவண்டு விடாமல் தன் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொண்டார்.

சகஜமாக எல்லோரிடமும் எளிமையாக பழகும் தன்மை, அடக்கம், பணிவு போன்ற நற்குணங்களால் எல்லோர் மனதையும் கவர்ந்த அன்னார் சமூக சேவைகள், ஆலயத்திருப்பணிகள், ஏனையோருக்குமான உதவிகளை வலதுகரம் கொடுப்பது இடது கரம் கூட அறியக்கூடாது என்றாற் போல் செய்து வந்தார். அதுமட்டுமல்லாமல் தனக்கான ஒரு கொள்கையை வகுத்து அதன்படி வாழ்ந்து காட்டிய உத்தமராகவும் திகழ்ந்தார். மற்றவர்களைப் பற்றிய குறை கூறல்கள், எதிர்மறைப் பேச்சுக்களை அவர் வாய்மொழிந்து நாம் என்றுமே அறியோம். அன்னார் அந்தக் காலத்து பழைய படங்கள், பாடல்களை கேட்டு இரசிப்பதில் அலாதி பிரியம் கொண்டவராகவும் திகழ்ந்தார்.

தன் மனைவி, தான் பெற்றெடுத்த பிள்ளைகளே தன் உலகம் என்று வாழ்ந்த அவர் அவரது அறுபதாவது பிறந்தநாளை கொழும்பில் தன் குடும்பத்தோடு விமர்சையாக கொண்டாடி மகிழ்ந்தார். சீரும் சிறப்புடனும் தன் வாழ்வை வாழ்ந்த அன்னார் ஒரு சிறந்த குடும்பத்தலைவனுக்குரிய அனைத்து இலட்சணங்களையும் கொண்ட சிறந்த ஆண் மகனாக திகழ்கிறார். **"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"** என்ற கூற்றுப்படி தன் பிள்ளைகளுக்கு அவரே ஒரு முன்மாதிரியாகவும் அவர்களின் கதாநாயகனாகவும் திகழ்கின்றார். தன் வாழ்நாளில் எத்தனையோ இன்னல்கள், மனக்காயங்கள், தொழில் ரீதியான போட்டிகளை அவர் சந்தித்திருந்தாலும் தன் குடும்பத்தாருக்குத் தனது வேதனைகளை கூட வெளிக்காட்டாதவராகவும் இருந்தார். காரணம் தன் குடும்பத்தார் மனம் நொந்து விடுவார்களோ என்று அவர்கள் பற்றிய சிந்தையிலேயே வாழ்ந்தார்.

தனது மணவாழ்வில் இறுதிவரை மனமகிழ்ச்சியுடன் வாழ்ந்த அவரது வாழ்வில் அவர் எதிர்பார்த்திருந்த நீண்ட நாள் ஆசை நிறைவேறவில்லை. அது தான் இறப்பதற்கு முன் அவரது கடைசி மகளது மணவாழ்க்கையை செய்து மகிழவில்லை என்பதாகும். உடம்பில் உயிர்மூச்சு இருக்கும்வரை உழைத்த சிறந்த உழைப்பாளியாகவும், பண்பாளனாகவும், இறைபக்தி நிறைந்தவராகவும் விளங்கிய அன்னார் 26.08.2021 அன்று மாலை திடீர் சுகவீனத்தால் அவரது 63 ஆவது அகவையில் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோரையும் தனியே பரிதவிக்கவிட்டு இவ் உலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

**"உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்கா தென்பது வல்லவன் வகுத்த விதி"** என்ற வரிகளைப் போல அன்னார் எம்மை விட்டு விண்ணுலகம் சென்றாலும் எம்முடனேயே என்றும் வாழ்வார். மறைந்தும் மறையா எம் பெருமகனின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!**

# சின்னமணி அண்ணா !!!.....

*வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும்,*
*யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டு*
*அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து*
*பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்*
*இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும்*
*நல்லவராய் நாணயமாய் நடந்தீர்*
*ஏனோ இறைவன் இடை நடுவில் பறித்து விட்டான்..*
*துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாய்*
*அடைக்கலம் தந்த உம்மை*
*ஆண்டவன் ஏனழைத்தான்*
*பண்புள்ளோரை பல காலம்....!*
*வாழவிடக் கூடாதென்றோ? என் செய்வோம்....!*

*இறைவன் சித்தம் இது;*
*இனி காணமுடியாத சோகநிலையோடு*
*இங்கிருந்தே ஏங்கியழுகிறோம்.*
*கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்*
*எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்*
*மண் விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்*
*கண் விட்டு மறையாமல் கன காலம் இருப்பீர்கள்.*
*வார்த்தை தடுமாறுகின்றதே நேற்றுக் கண்ட உமை நினைத்து*
*நெஞ்சம் உருமாறுகின்றதே காந்தமாய் எமையீர்த்த உமை*
*காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ? இன்று*
*மங்காத உம் நினைவால் மயங்கியே நிற்கின்றோம்.*

*அமைதியின் உருவமாகவும் அடக்கத்தின் இருப்பிடமாகவும்*
*பண்பின் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும்*
*எம்மத்தியில் அன்பு ஒளியாக இருந்த உத்தமரே!!*
*யாழ்ப்பாணத்தில் உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும்*
*உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து*
*ஒருபோதும் மறைவதில்லை.*
*நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே*
*அன்பானவனே உன் பெயரும் விளங்கும்!!*
*கல்மனம் படைத்த காலனவன் கவர்ந்தானோ உன் உயிரை*
*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.*

*காலனவன் தன் கணக்கை சாலவே செய்யவே மண் விட்டு*
*வானம் சென்றீரோ? வானம் சென்ற உமை நினைத்து*
*கண்ணீர் விட்டு கரைகிறோம் ஆற்றுவாரில்லை*
*சின்னமணி பத்தர் என்னும் சிறப்புடனே*
*எமது ஸ்தாபனத்தின் பெயர் விளங்க*
*மணமங்கையர்தம் மங்கல நாணினை (தாலி)*
*தரமான தங்கத்தால் வடிவமைக்கும் விற்பனராய்*
*தொழில் பக்தி கொண்டோனாய் விளங்கினீரே*
*எம் போன்றவர்களுடன்*
*அன்புடனும் கனிவுடனும் பணியாற்றினீரே!*
*அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா*
*இறைபதம் சேர இறைவனை இறைஞ்சுகிறோம்!!*

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!**

**வினோ நகைப்பூங்கா**
*உரிமையாளரும், ஊழியர்களும்.*
*185, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# மனைவி புலம்பல்

## உற்றதுணை நீங்கள் மட்டுமே.........

நெற்றியில் திலகமிட்டு கழுத்தில் மூன்று முடிச்சிட்டு
நல்லூரான் பூங்காவனத்தன்று என் கரம் பற்றினீர்களே அப்பா....
காலம் முழுதும் என்னுடன் வருவேன் என வாக்குறுதியளித்தீர்களே அப்பா....
ஏன் என்னை தனியாக விட்டுச் சென்றீர்கள் அப்பா....
சீதனம் வாங்குவது தவறு என்று காதில் தோடு கூட இல்லாமல்
வந்த என்னை ஊரறிய கை கோர்த்தீர்களே அப்பா....
எனக்கு அப்பா இல்லை என்ற குறை தெரியாது கணவனாக
மட்டுமல்லாது எனக்கொரு தந்தையாகவும் இருந்தீர்களே அப்பா....
சின்னமணி போல் கணவன் உனக்கு கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க
வேண்டும் என்று ஊரார் சொன்னார்களே அப்பா....
நம் திருமணவாழ்விற்கு சாட்சியாக இறைவன் முத்தான மூன்று
பிள்ளைகளை தந்தாரே அப்பா....
ராணி இல்லை மகாராணியாக என்னை நடத்தினீர்களே அப்பா....
செய்வது நகைத்தொழில் என்றோ அல்லது என் மனைவியை
அழகு பார்க்க வேண்டும் என்றோ தங்க நகையால் என்னை
அழகு பார்த்தீர்களே அப்பா....
என்னவனின் சௌபாக்கியத்திற்காக தினந்தோறும்
கோவில் சென்றேனே அப்பா....
நான் கனவில் கூட எதிர்பார்த்திராத நல்வாழ்வை எனக்கு அளித்தீர்களே அப்பா....
சொந்த வீடு, வாசல்,வாகனம் என்று எக்குறைகளும் இல்லாத
வாழ்வை நாம் இருவரும் வாழ வேண்டும் என்று எல்லாம்
பார்த்து பார்த்து செய்தீர்களே அப்பா....
வாழ்வில் சில நேரங்கள் கஷ்டம் வந்த போதும் உனக்கு
நானிருக்கிறேன் என்று நீங்கள் கூறிய வார்த்தைகள் இன்னும்

மறக்க முடியவில்லை அப்பா....
கஷ்டங்கள் எமை ஆட்டிப்படைத்தாலும் கலங்காது முகங்கொடுத்தீர்களே அப்பா....
சுமங்கலியாக நான் என் வாழ்வை துறக்க வேண்டும் என்றே
இறைவனிடம் பிரார்த்தனை செய்தேனே அப்பா....
ஆனால் இறைவன் என் குரலை செவிசாய்க்கவில்லையே அப்பா....
நீங்கள் எனக்கு கணவனாக கிடைக்க என்ன தவம் செய்தேனோ அப்பா....
கிளி என்று என்னை யாரும் அறியமாட்டார்களே அப்பா....
சின்னமணியின் மனைவி என்றே கூறுவார்கள்....
எங்கேயும் என்னை தனியாக செல்ல விடமாட்டீர்களே அப்பா....
சகோதரர்களின் வீட்டிற்குச் சென்றாலும் அங்கு ஒரு நாள் கூட
தங்க விடமாட்டீர்களே அப்பா....
ஒரு நாள் பிரிவைக் கூட தாங்க முடியாத நீங்கள் நிரந்தரமாக
என்னைவிட்டு பிரிந்து சென்றதேனோ அப்பா....
யாரைப் பற்றியும் குறை கூறவே மாட்டீர்களே அப்பா....
என் தேவைகள், ஆசைகள் நான் உங்களிடம் கூற முன்னரே
அதை அறிந்து செய்வீர்களே அப்பா....
தனக்கென எதுவுமே செய்யாத நீங்கள் ஊரார் பார்க்க என்னை
ஆடம்பரமாக வாழ வைத்தீர்களே அப்பா....
உங்களுக்கான வாழ்க்கை பாதையில் சரியாக இருந்தீர்களே அப்பா....
வயது முதிர்ந்தாலும் பிள்ளைகளிடம் கடமைப் படக் கூடாது என்று கூறி
இறக்கும் வரை உழைத்தீர்களே அப்பா....
என்ன நடந்தாலும் என் இறுதி மூச்சு வரை என்னுடன் உன்னை வைத்துப்
பார்ப்பேன் என்று கூறுவீர்களே அப்பா....
பிள்ளைகள் என்னுடன் இருக்கிறார்கள் தான், ஆனால் நீங்கள்
என்னுடன் இருப்பது போல் வருமா அப்பா....
கட்டிய நாள் முதலாய் கலங்காது காத்தவரே
நான் இப்பொழுது தனியாக கலங்குகின்றேனே அப்பா....
என் அழுகுரல் உங்களுக்கு கேட்கின்றதா ......?

*உங்கள் அன்பு மனைவி*
**துதிகாம்பிகை (கிளி)**

# பிள்ளைகள் புலம்பல்

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே !
கண்மூடி முழிக்குமுன்னே எம்மைக் கடந்துவிட்டாயே ....
என்றென்றும் எங்களுடன் இருப்பீர்கள் என
எண்ணில்லாக் கனவுகள் கண்டிருந்தோம் !
இடை நடுவில் எம்மைப் பரிதவிக்க விட்டு
ஏன் அப்பா மறைந்து விட்டீர்கள் ?
காலன் உங்களை காலத்தால் அழைத்தவேளை
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எம் மனத்தால் முடியவில்லை !
விதி செய்த சதிதானே என்று எம் மனது எண்ணினாலும்
எம் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள் !
சிறந்த தந்தைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய நீங்கள்....
எம்மை தனியாக தவிக்கவிட்டு சென்றதேனோ ?
அப்பா என்ற சொல்லுக்கு முழு அர்த்தத்தை உங்களில்
நாம் கண்டோம் அப்பா ....
குறையில்லா வாழ்வுதனை எமக்களித்து எம்முடன்
வாழாமல் சென்றதேனோ அப்பா ....
எதுவென்றாலும், எமக்கு ஏதேனும் என்றாலும் எம் தந்தை
எமக்கு உள்ளார் என மார்தட்டி இருந்தோமே அப்பா ....
இனிமேல் நாம் யாரை நினைப்போம் அப்பா ....
எமக்கு துன்பம் வரும் வேளையில் நாம் துவண்டுவிடாமல்
இருக்க எமக்கு தோள் கொடுத்தீர்களே அப்பா ....
கேட்டவுடன் எதையும் எமக்காக பார்த்து பார்த்து செய்யும்
நீங்கள் எம்மிடம் எதையும் எதிர்பார்த்ததில்லையே....
எப்போது எம் கடமையை நாம் உங்களுக்குச் செய்யப்போகிறோம் அப்பா ....
எம்மைப் பற்றி மட்டுமே எத்தனையோ கனாக்கள், ஆசைகள்
கண்டீர்களே அப்பா .... அவை நிறைவேறும் தருவாயில்

எம்மை விட்டு சென்றதேனோ அப்பா ....
காவலனாய், இரட்சகனாய் எமக்கு நீங்கள் உள்ளீர்கள்
என எதற்கும் அஞ்சாமல் நாம் இருந்தோமே அப்பா ....
சிகரம் எமை தொட வைத்து நீங்கள் இல்லாமல் நாம் இல்லை
என சற்றும் எம்மைப்பற்றி சிந்திக்காமல் சீக்கிரம்
விண்ணகம் சென்றதேனோ அப்பா ....
எம் அன்புக்கு அடிமையாய் யாரிடமும் எம்மை விட்டுக்
கொடுக்காமல் இருந்தீர்களே அப்பா ....
எத்தனை உறவுகள் எம்மைச் சுற்றி இருந்தாலும்
உங்களைப் போல் யார் வருவார் எமக்கு அப்பா ....
உங்களுக்கு நிகர் எவர் உண்டோ....
தனிமையால் வாடுகிறோம் அப்பா ....
எமக்காக எதையுமே சிறப்பாக தந்து எம் வாழ்வை
மேலோங்க செய்தீர்களே அப்பா ....
நற்கல்வி தந்து நலம் பெற வாழ வைத்தீர்களே அப்பா ....
நாம் ஆளான பின்னரும் சின்னமணி பத்தரின் பிள்ளைகள்
என்று கூறுவதிலேயே பெருமை கண்டோமே அப்பா ....
வெளியாட்களுடன் பம்பலடித்து சிரித்து மகிழும் நீங்கள்
எங்களுடன் பொய்யான கண்டிப்புடன் இருந்தீர்களே அப்பா ....
உங்களுக்கென்று எதுவும் நீங்கள் செய்ததை நாம்
பார்க்கவில்லையே அப்பா ....
10ஸ்ரீCD185 இல் நீங்கள் வரும் சத்தம் கேட்டு விட்டு
வாசலடி வந்து கண்டு ரசித்தோமே அப்பா ....
ஆகாசத்தை மிஞ்சி அன்பு தந்தீர்களே அப்பா ....
உங்கள் கஷ்டங்களை மறைத்து எமக்காக இறக்கும் வரை
உழைத்தீர்களே அப்பா ....
எமக்கு ஏதேனும் என்றால் துடிதுடித்துப்போவீர்களே அப்பா ....

**யாரிடமும் கடமைப்பட விரும்பாத நீங்கள் உங்கள்**
**இறுதி மூச்சுவரை அவ்வாறே வாழ்ந்தீர்களே அப்பா ....**
**இல்லை, முடியாது என்ற வார்த்தைகளை உங்கள்**
**வாயிலிருந்து நாம் கேட்டதில்லையே அப்பா ....**
**எல்லாம் வெல்லலாம் என்று எமக்கு கூறுவீர்களே அப்பா ....**
**மண்ணில் வாழ்ந்த போதும் உங்களிடமே எல்லாம் கேட்டு**
**பழகி விட்டோம் அப்பா ....**
**நீங்கள் விண்ணகம் சென்றாலும் கேட்க வேறு யாருமில்லை அப்பா ....**
**தெய்வமாய் நீங்கள் இருந்து எம் இறுதி மூச்சு வரை**
**வழிநடத்துங்கள் அப்பா ....**
**கல்லறை வாழ்விற்கு நீங்கள் சென்றாலும் எங்கள்**
**நெஞ்சறைக் கூட்டில் அழியா ஓவியம் அப்பா நீங்கள் !**
**இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையென்றால் அப்பா**
**நீங்களே எங்கள் அப்பாவாக வர வேண்டும் என்ற**
**வரத்தையே வேண்டுகின்றோம் எம் அன்பு அப்பா .... !**

*என்றும் உங்கள் அன்பு பிள்ளைகள்*
**கமலன் - கஸ்தூரி - பிரியங்கா**

# மருமகன் புலம்பல்

## என் அருமை மாமாவே.........

*புன்சிரிப்பால் அனைவரையும்*

*கவர்ந்த என் மாமாவே*

*பார்வைக்கு கம்பீரமானவரே*

*மனதளவில் குழந்தை நீங்கள்*

*உங்களுடன் இணைந்து வாழ்ந்திட*

*எனக்கோ கொடுத்து வைக்கவில்லை.*

*அழுது புலம்புகிறேன் வழி எதுவும் தோன்றவில்லை.*

*உங்கள் நினைவுகளிலே வாழ்வதனை தொடர்கிறேன்.*

*நீங்கள் மறைந்த செய்தி கனவாகி போகிடவே.*

*என் மனமோ தவிக்கின்றது ....*

*உங்களுடன் வாழ்ந்திட நெடுங்காலம் ஆசை கொண்டேன்*

*இடையிலே பறித்து விட்டான் இறைவனுக்கும் இரக்கம் இல்லை.*

*என்ன செய்வேன் என்னாலும் அழத்தானே முடிகிறது.*

*யாருக்கு யார் நாம் ஆறுதல் கூறிட*

*வார்த்தைகள் தேடுகிறோம் வார்த்தைகளோ போதவில்லை.*

*மாமா என்றழைக்க வார்த்தைகளோ ஏங்கிட*

*மனதுக்குள்ளே அழைத்துக் கொண்டேன்*

*பண்பான உங்கள் நினைவுடனே*

*பண்பு மிக்க மருமகனாய் என்றும் உங்களுடன்......*

*உங்கள் மருமகன்*

**சுதர்சன்**

# மருமகள் புலம்பல்

## திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?"

*"மாமா" என்று உங்களை ஒருபோதும் அழைத்ததில்லை.*
*உங்களை பார்த்த நாள் முதல் "அப்பா" என்றழைக்க,*
*பாசத்தோடு மகளாய் என்னை பதினைந்து வருடங்களாக*
*ஏன், உயிர் துறக்கும் நொடி வரை*
*அன்பாய் எனை அரவணைத்த என் தெய்வமே ,*
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

*அப்பா, "சங்கிலி வேணும், காப்பு வேணும், பதக்கம் வேணும்"*
*நான் என்ன கேட்டாலும்,*
*ஒரு நாளும் இல்லை என்றதில்லை என் அப்பா,*
*"பொறு அம்மா, செய்து தாரேன்" என்ற பதிலை தவிர,*
*"நீங்கள் யார் என்னிடம் கேட்க" என்றதில்லை. என் தெய்வமே ,*
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

*யார் என்னைப் பற்றி என்ன கூறினாலும்,*
*ஒரு நாள் கூட பார்வையாலோ, சொல்லாலோ*
*என்னை காயப்படுத்தியதில்லை என் அப்பா.*
*உங்கள் மனைவிக்காகவும் பிள்ளைகளுக்காகவும் மட்டுமே,*
*தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்ற,*
*உங்களைப் பார்த்து பல நாள் பொறாமை கொண்டிருக்கின்றேன்,*
*இப்படி ஒரு மனிதரா என்று.*
*உங்களுக்கு ஈடு இணை யாரையும் கண்டதில்லை என் தெய்வமே ,*
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

உங்கள் மகனுக்கு என்னை பிடிக்கும், என்ற ஒரேயொரு காரணம்,
மருமகளாவதற்கு முன்னமே என் தேவைகளையும்
பார்த்து பார்த்து செய்து, என் உணர்ச்சிகளுக்கும் மதிப்பளித்து,
“விரும்பி மணமுடிக்கும் நீ, பெண் வீட்டில் ஒரு சதம் வேண்டக்கூடாது.”
என்று கூறிய உங்களைப் போல் ஒரு மாமனார், அப்பா
யாருக்கு கிடைக்கும் இனிமேல் ? என் தெய்வமே ,
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

கொழும்பு வரும் போதெல்லாம் கொத்து ரொட்டி கேட்டால்,
பச்சைப் பையிலிருந்து காசை விசுக்கி,
நீங்கள் வாங்கிக் கொடுக்கும் போதெல்லாம்,
“அப்பாவின் காசில் கொத்து ரொட்டி சுவை அதிகம்” என்று நாம் கூற,
“கொழும்புக்கு வந்தாலே செலவு தான்” என்று பொய்க்கோபம்
கொள்வீர்.
எம் சின்ன சின்ன ஆசைகளை கூட நிறைவேற்ற தவறாத,
என் தெய்வமே ,
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

உயிர் துறப்பதற்கு முதல் நாள், என்னிடம் தொலைபேசியில்,
உங்கள் பொறுப்புக்கள் சிலதை என்னிடம் ஒப்படைக்க,
“ஏன் அப்பா, தேவையில்லாமல் கதைக்குறீங்க?” என்றேனே தவிர,
என்னை விட்டு நீங்கள் நிரந்தரமாய் போய் விடுவீர்கள் என்று,
துளி கூட எண்ணவில்லை அப்பா.
குற்ற உணர்ச்சியாய் உள்ளது அப்பா,
என்னை நம்பும் அளவுக்கு நான் என்ன செய்தேனென்று,
எனக்கொரு வாய்ப்பு தர என் தெய்வமே ,
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

*தான் ஈன்ற பிள்ளைகளைத் தவிர, இன்னொரு பிள்ளை எனக்கு,*
*உம் பிரிவு இப்படியொரு மீளா துயரத்தை ஏற்படுத்துகிறது என்றால்,*
*உம்மைப் போல் ஒரு மாமனிதர் யார் இருக்க முடியும் ?*
*வார்த்தைகள் போதாது அப்பா உங்களைப் பற்றி கூற,*
*நான் பார்த்து வியந்த மிகச் சிறந்த மனிதன் நீங்கள்.*
*நீங்கள் என்னை விட்டுச் சென்றது கனவாக இருக்கக் கூடாதா*
*என மனம் ஏங்குகிறது அப்பா ....... என் தெய்வமே ,*
**திரும்பி வர மாட்டீர்களா அப்பா என்னிடம் ?**

*என்றென்றும்*
*உங்கள் அன்புக்கினிய மருமகள்,*
**சுமதி**

# பேரபிள்ளைகள் புலம்பல்

பேசத் தெரியவில்லை பேசும்முறை பயிலவில்லை
பெறற்கரிய தாத்தா எங்கே போனீர்கள்.... ?
வாசத் தண்டுகளாய் வாடியிங்கே துடிக்கின்றோம்
வாய்திறந்து சொல்லும் வகை அறியோம் தாத்தா ....
நேசத்தோடு சொல்லம்மா என்று நீங்கள் கூறும்
வார்த்தை தனை நாம் இனி எப்போது கேட்கப்போகின்றோம் தாத்தா .... ?
நம் அப்பா அம்மாவிற்கு மேலான அன்பினை காட்டினீர்களே தாத்தா .... ?
உங்கள் கைகோர்த்து விளையாடும் நாள்
இனி இல்லையே தாத்தா ....
நாம் கேட்டவுடன் எதையும் வாங்கி தருவீர்களே....
நாம் உங்களிடம் எது கேட்கின்றோம் என்பது
தெரியாவிட்டாலும் விலைபார்க்காது நாம் ஆசைப்பட்டு
உங்களிடம் கேட்டு விட்டோம் என்று வாங்கித்தருவீர்களே தாத்தா ....
நீங்கள் எமக்கு கூறிய அறிவுரைகள் இன்றும் எம்
காதில் கேட்கின்றதே தாத்தா ....
உங்களைப் போல் ஒரு தாத்தா எமக்கு கிடைக்காது தாத்தா ....
நீங்கள் எங்களுடன் இல்லாவிட்டாலும் உங்கள் வழிநின்று நாம்
இனி வாழ்வோம் தாத்தா ....
WE MISS YOU தாத்தா ....

*உங்கள் செல்லப் பேரப்பிள்ளைகள்*

**அன்றீனா - றியானா - ஹாசினி**

# தங்கைகள் துயரம்

**அண்ணா அண்ணாவென்றழைக்கின்ற போதெல்லாம்**

**அருகிருந்து துயர்துடைத்த தந்தையானாய்**

**கண்ணான தங்கைகள் நாம் இருவர் என கனிவுடனே**

**எமையணைத்துக் கண்போலக் காத்து நின்ற இனிய அண்ணா**

**விண்ணேகிப் போயினையே........**

**வேதனையால் புலம்புகிறோம் விழிதிறந்து தங்கைகள்**

**எமைப் பாராயோ நீ ?**

**கண்ணீரில் மிதக்கின்றோம்.....**

**கரமிழந்து துடிக்கின்றோம்**

**கருணை இல்லையோ உனக்கு**

**அண்ணா அண்ணா !**

*உங்கள் பாசமிகு தங்கைகள்*

**சந்திரவதனி - வசந்தி**

# பஞ்ச புராணம்

— திருச்சிற்றம்பலம் —

## விநாயகர் துதி

ஓம் என்னும் ப்ரணவ ரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத நாயகா
தேவாதி தேவனே விநாயகா.
வல்வினைகள் நீக்கும் சக்தி நாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மோனத்தின் முழுப்பொருளே நாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா.

## தேவாரம்

பிடியதன் னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காத
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாரிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைமல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அழகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே! சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன் கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள்
வாழ்க நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

— திருச்சிற்றம்பலம் —

*****

## *சிவபுராணம்*

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க**
**கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க**
**ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க**
**ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க**
**வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க**
**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க**
**புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க**
**கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க**
**சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க**
**ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி**
**தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி**
**நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி**
**மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி**
**சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி**
**ஆராத இன்பம் அருளுமலை போற்றி**
**சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை**
**முந்தை வினைமுழுதும் மோய உரைப்பன்யான்**
**கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி**
**எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி**
**விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்**
**எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்**
**பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்**

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை

அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து !

*****

# கௌரி காப்பு

## காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்

பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே

அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணீயல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு

வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா

வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்து எம்மைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினையாவும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சுவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று

ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கு அரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு தவமிருந்து
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு

சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

— திருச்சிற்றம்பலம் —

*****

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

லிங்காஷ்டக மிதம் புண்யம் யஹ் படேச் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி சிவேந ஸஹ மோததே.

*****

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ர ர ர ர ர ர ர
ரிஹண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர வணப வருக வருக

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக!

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோ தனென்று

உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழி செவி இரண்டும் வேலவர் காக்க

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறக் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்

பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப்

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்

ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் நாடினென் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக

அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்

வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி

நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு

ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலாது அருளுவர்
மாற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்

இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்

மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!

இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

*****

உ

# ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
# விஸ்வ பிரம்ம குலம்
# "பொற்றொழிலைப் போற்றுவோம்"




உலகத்தில் வாழும் அனைத்து மக்களும் ஏதோ ஒரு குலத்தோன்றலில் உதித்தவர்களாகவே உள்ளனர். தம் வாழ்வை கொண்டு செல்ல அவர்களது குலத்தொழில் வழி அமைத்துக் கொடுக்கின்றது. அந்தவகையில் பொற்றொழில் என்பது விஸ்வகுல வழித்தோன்றலாகக் காணப்படுகிறது. விஸ்வகுலம் என்பது சாதாரணமாக தோன்றிய ஒரு குலத் தோன்றல் அல்ல. காரணம் முழு உலகத்தையும் வடிவமைத்த ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மா என்னும் மகாபுருஷரால் விஸ்வகுலம் தோற்றுவிக்கப்பட்டது.

விஸ்வப் பிரம்மா, கடவுளுக்கும் மேலான கடவுள் எனப் போற்றப்படுகிறார். விஸ்வப் பிரம்மம் என்பவர் ஐந்து விஸ்வ கர்மரிஷிகளை உலக நன்மைக்காக உருவாக்கியவர். பிரம்மம் என்றால் தொடக்கம், ஆக்கம்,

எல்லையில்லாதது என்று பொருள்தரும். எனவே உலகத்தின் தொடக்கத்தில் படைப்புத் தொழிலை மேற்கொள்ள ஐந்து முகங்களிலிருந்து ஐந்து ரிஷிகளை உருவாக்கியவர் என்பதால் விஸ்வப் பிரம்மம் என்று அறியப்படுகிறார். இவ் ஐந்து ரிஷிகளைப் பற்றி சுருக்கமாக கீழ் உள்ள சிறு அட்டவணையினூடாக நாம் அறியலாம்.

| பிரம்ம குலம் | கோத்திரம் | தொழில் | வேதம் | திசை |
|---|---|---|---|---|
| மனு விஸ்வகர்மா | சானக ரிஷி கோத்திரம் | இரும்பு (கொல்லர்) | ரிக் | கிழக்கு |
| மய விஸ்வகர்மா | சனாதன ரிஷி கோத்திரம் | மரம் (தச்சர்) | யசுர் | தெற்கு |
| துவஷ்ட விஸ்வகர்மா | அபுவனஸ ரிஷி கோத்திரம் | செம்பு, பித்தளை (கன்னர்) | சாம | மேற்கு |
| சிற்பி விஸ்வகர்மா | ப்ரத்னஸ ரிஷி கோத்திரம் | கல் (சிற்பியர்) | அதர்வண | வடக்கு |
| விஸ்வக்ஞ விஸ்வகர்மா | சுபனஸ ரிஷி கோத்திரம் | பொன் (தட்டார்) | பிரணவ | ஆகாயம் |

## *விஸ்வகர்ம மக்களின் கொடி*

❖ ஐந்து விஸ்வகர்ம ரிஷிகளுக்கும் முறையே வெள்ளை, கருநீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்களைக் கொண்ட கொடி காணப்படுகிறது. இந்த ஐந்து வர்ணக் கொடியின் மத்தியில் அநுமானுடைய உருவமும் காணப்படும்.

## *விஸ்வகர்ம ஜெயந்தி விழா*

❖ வித்தைகளின் வித்தகர் விஸ்வகர்மாவை போற்றவும், கலைகளை காப்பதற்கும், படைப்பாளிகளைப் போற்றவும், பாராட்டவும் ஒவ்வொரு ஆண்டும் புரட்டாதி மாதம் வருகின்ற அமாவாசைத் தினத்தில் விழா எடுக்கப்படுகின்றது. இது விஸ்வகர்ம ஜெயந்தி விழா எனப்படுகிறது.

ஐந்து விஸ்வகர்ம ரிஷிகளுமே ஐந்தொழில்களுக்கு படைப்பாளிகளாக உள்ளனர். இவ் ஐந்தொழிலை மேற்கொள்பவர்கள் கொல்லர், தச்சர், கன்னர், சிற்பியர், தட்டார் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சைவர்கள் ஆவர். தீட்சை எடுத்து பூநூல் அணிவது இவர்களது மரபாகும். ஆசாரங்களையும், சைவ வழிபாடுகளையும் முறையாகப் பின்பற்றுவார்கள். திருமணத்தை தங்களுக்குள்ளும், தங்கள் உட்பிரிவுகளுக்குள்ளும் செய்து கொள்கின்றனர். வேதங்களில் மட்டுமல்லாது இலக்கியங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், புராணங்களிலும் விஸ்வகுலம் பற்றி குறிப்பிட்டுள்ளது. இது இக்குலத்திற்கான தனிச் சிறப்பாகும்.

இவ்வாறு பெரும் சிறப்பு மிக்க விஸ்வகுலத்தில் பொற்றொழில் என்பது அழகுக்கு அழகு சேர்க்கும் ஒரு அற்புதக் கலையாக காணப்படுகிறது. பொற்றொழிலானது தங்க நகைத் தொழில், ஆபரணத் தொழில் என்றும் அழைக்கப்படுகிறது. பொற்றொழிலைச் செய்பவர் தட்டார், பத்தர், பொற்கொல்லர், நகைவேலை செய்பவர் என்றும் அழைக்கப்படுவர். பொன் நகைக்கு என்று மதிப்பும் பெருமையும் உருவானதோ அன்று முதல் பொற்கொல்லருக்கும் தனிப் பெரும் மதிப்பும் மரியாதையும் கிடைத்தது. புராண இதிகாசங்களில் அரசனுக்கு சமமாக அமரும் வாய்ப்பு பொற்கொல்லர்களுக்குக் கிடைத்தது என்றும் மன்னனின் வாரிசுக்கு முடிசூட்டுவதாக இருந்தால் முதலில் பொற்கொல்லரைத்தான் மன்னர் அணுகுவார் என்றும் வரலாற்று நூல்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. அதுமட்டுமல்லாது பொற்றொழிலாளர்களை விஸ்வகுலத்தின் செல்லப் பிள்ளைகள் என்றும் கூறுவர்.

பொற்கொல்லர் தனது பொற்றொழிலை முறையாக ஒரு குருவிடம் பயின்று தொழிலை மேற்கொள்வதற்கான பட்டறையை அமைத்து அதற்கான கருவிகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்தி அவருடைய கற்பனாக்கத்திலும், அவரது வாடிக்கையாளர் விரும்பி கேட்கும் வடிவத்திலும் நகைகளை உருவாக்குகின்றார். சாதாரணமாக இத்தொழிலை நாம் மேற்கொள்ள முடியாது. இத்தொழிலை செய்வது என்றால் கடவுள் பக்தி, தொழில் நேர்மை, படைப்பாக்கத்திறன், பொறுமை, நிதானம், ஒழுக்கம் போன்ற விடயங்கள் பொற்கொல்லரிடம் காணப்பட வேண்டும். பொற்றொழில் என்பது பரம்பரை பரம்பரையாக செய்து வரும் தொழிலாகவும் காணப்படுகிறது. பொற்றொழிலாளர்களது நலன் பேண அவர்களுக்கான சங்கங்களும் அமைப்புக்களும் காணப்படுகிறது.

வாழ்வின் முக்கிய நிகழ்வான திருமணத்தின் போது பொற்கொல்லரின் வகிபங்கு அதிகமாக காணப்படுகிறது. திருமணத்தின் போது மணமகனால் மணமகளுக்கு அணிவிக்கப்படும் திருமாங்கல்யம் (தாலி) பொற்கொல்லராலேயே செய்யப்படுகிறது. திருமாங்கல்யம் எவ்விதமாக செய்யப்படுகின்றது என்றால் அதற்கென்று "பொன்னுருக்கல்" என்ற சடங்கும் இடம்பெறும். அதாவது திருமாங்கல்யம் (தாலி) செய்வதற்கு தேவையான தங்க நாணயத்தை ஆலயத்தில் இறைவனடியில் வைத்து பூசை செய்த பின்னர் பொற்கொல்லர் மூலம் உருக்கப்படுவதே பொன்னுருக்கல் எனப்படும். நிலையான இடத்தில் பல தலைமுறை கண்ட பொற்கொல்லர் திருமாங்கல்யம் செய்வதானது மிக சிறந்த முறையில் மணமக்களின் வாழ்க்கை அமையும் என்பது முன்னோர்களின் வாக்கு.

பொன்னுருக்கல் என்பது நன்னாள் குறித்து கைதேர்ந்த பொற்கொல்லரால் மிகவும் ஆச்சாரமாகவும், பக்தி சிரத்தையுடனும் செய்யப்பட வேண்டும். காரணம் அதில் ஏதேனும் தவறுகள் ஏற்படின் அது மணமக்களின் வாழ்வில் ஏதேனும் பாதிப்பு ஏற்படும் என்பது நம்பிக்கை.

மேலும் பொற்கொல்லரால் உருக்கப்பட்ட பொன் என்னவடிவத்தில் வந்துள்ளது என்பதைப் பார்த்து மணமக்களுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்று முற்கூட்டியே கூறும் வழக்கமும் உள்ளது. ஒவ்வொருவரும் தமது குலத்திற்குரிய வகையில் திருமாங்கல்யத்தை செய்து கொள்வர். விஸ்வகுலத்தில் தோன்றியோர் மூன்று கொம்பினால் ஆன திருமாங்கல்யத்தை அணிந்து கொள்வர்.

திருமணம் மட்டுமல்லாது ஏனைய மனித வாழ்வியல் நிகழ்வுகளிலும் பொற்கொல்லரது பங்கு காணப்படுகிறது. குறிப்பாக நாம் மூக்குத்தி அணிவித்தல், காதணி விழாக்களையும் குறிப்பிடலாம். மேலும் சித்திரை வருடப்பிறப்பு தினத்தில் கைவிசேடத்தின் போது வெற்றிலையில் பணம், மஞ்சள் என்பவற்றோடு பொன்னையும் வைத்து வழங்குவதும் ஒரு சில பொற்கொல்லர்களால் பின்பற்றப்படும் வழக்கமாகவும் உள்ளது. அந்த வகையில் பொற்றொழிலின் சிறப்புக்களை கூறுவது என்றால் நாம் கூறிக் கொண்டே செல்லலாம். அத்துடன் பொற்றொழிலாளர் ஒருவர் சிறந்த பத்தர் என்று பெயர் எடுப்பது இலகுவான செயல் அல்ல. அதற்கு அவரிடம் நாணயம், விசுவாசம், தொழில் பற்று, உண்மை போன்ற விடயங்கள் காணப்படுதல் வேண்டும். இவை அனைத்தும் ஒருங்கே அமைந்தவரையே நாம் சிறந்த பொற்றொழிலாளர் என்கின்றோம். இவர்களாலேயே மட்டும் தான் இவ் அற்புத தெய்வீக கலையான பொற்றொழிலும் அடுத்த தலைமுறையினருக்கு சீராக கடத்தப்படும் என்பதோடு ஒரு அழியாக் கலையாகவும் என்றும் வாழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**ஐம்முக பிரம்மனே போற்றி**<br>
**ஐந்தமிழ் வேதனே போற்றி**<br>
**ஐந்தொழில் நாதனே போற்றி போற்றி..."**

**எஸ். பிரியங்கா**


# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் மட்டுமல்லாது எமது உறவுகளின் அன்புப் பாலமாய் விளங்கிய எம் குடும்பத்தின் தலைவன் சின்னமணி பத்தர் என்று அன்போடு எல்லோராலும் அழைக்கப்பட்ட எங்கள் தந்தை பத்தோடு பதினொன்று இல்லாது, முத்தாக வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து மேலான அந்த இறைவனடி சேர்ந்த வேளை ஆறுதலாய் தேறுதலாய் எமது துக்கத்தில் கலந்து கொள்ள நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கிய வினோ நகைப்பூங்கா உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும், அப்பாவின் இவ்வுலக வாழ்வில் அவருடன் அன்பாகப் பேசி, உறவோடு வாழ்ந்திருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அன்போடு அவருக்கு ஒத்தாசைகள் புரிந்த நண்பர்களுக்கும், அமரரின் இறுதி யாத்திரையின் போது அருகிருந்து உதவிய அனைத்து உறவுகளுக்கும், இன்றையதினம் நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் பங்குகொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காய் வேண்டிக்கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

*– இவ்வண்ணம் –*

**மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும்**
**பேரப்பிள்ளைகள்**

## வம்ச விருட்சம்


சபாரத்தினம் + மகேஸ்வரி
துரைசிங்கம் + இராசலட்சுமி
சந்தனராசா
சந்திரசேகரம்
சந்திரவதனி + பவளகாந்தன்
வசந்தி + தங்கராசா
துரைரத்தினம்
துரைராணி + சுப்பிரமணியம்
துர்க்காதேவி + சதாசிவம்
துரைராஜசிங்கம் + புஸ்பலீலா
துவாரகாதேவி + குமார்
துதிகாந்தராசன் + விமலாதேவி
பூலோகரம்பை + சிவராசா
துரைவீரசிங்கம் + கீதா
துதிகாம்பிகை
துதிமதிராணி + சண்முகநாதன்
கமலன் + லோகமதி
கஸ்தூரி + சுதர்சன்
பிரியங்கா
ஹாசினி
அன்றினா
றியானா


கீதாசாரம்
எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றோருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்